# பாடம் 61: கத்தோலிக்கத் திருச்சபைக்கு வெளியிலுள்ள கிறிஸ்தவர்கள் (பகுதி 2)

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், கிறிஸ்தவ உலகைப் பிரித்த முதல் இரண்டு பெரும் பிளவுகள் பற்றி நாம் கற்றோம். கத்தோலிக்க திருச்சபையில் இருந்து பிரிந்து சென்ற கிறிஸ்தவர்களை நாம் கீழை மற்றும் கிழக்கத்திய ஆர்த்தோடாக்ஸ் கிறிஸ்தவர்கள் என்றும் அடையாளம் கண்டோம். இந்த பாடத்தில், புரட்டஸ்டான்ட் கிறிஸ்தவர்களின் இருப்புக்குக் காரணமான மூன்றாம் பெரும் பிளவு பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

## மூன்றாம் பிளவு: எதிர்ப்பாளர் சர்ச்சை

1. 16ஆம் நூற்றாண்டில் ஒரு பெரும் சமயப் புரட்சி, ஜெர்மனியில் தொடங்கி நடைபெற்றது. அது ஒரு கத்தோலிக்க குருவான மார்ட்டின் லுத்தரால் (1483-1546) தொடங்கப்பட்டது.

2. மார்ட்டின் பல சகோதர சகோதரிகள் கொண்ட குடும்பத்தில் மூத்த மகனாக இருந்தார். அவரது தந்தை ஹன்ஸ் லுத்தர், தமது குழந்தைகளைக் கடினமாகத் தண்டிக்கும் பண்பு உடையவராக அறியப்படுகிறார். மாட்டினின் குழந்தைப்பருவம் பற்றி அறியப் போதியத் தரவு இல்லை என்றாலும், அவரது அன்றாட வாழ்வு அத்தகைய கொடூர அனுபவம் கொண்டதாக இருந்ததாக அவரது வாழ்வை எழுதியவர்கள் குறிப்பிடுகின்றனர். தனது தாய், “முக்கியமற்ற ஒன்றுக்காக, குருதி சிந்தும் அளவுக்கு என்னை அடித்தார், அவர்களின் கடினத்தன்மையும் வாழ்வின் கோரமுமே என்னை அவர்களிடம் இருந்து தப்பியோடி துறவுமடத்துக்கு வந்து, நான் ஒரு துறவியாகச் செய்தது” என்கிறார் மார்ட்டின்.

3. 1501ல், 17வது வயதில், மார்ட்டின் சட்டம் படிப்பதற்காக எர்புர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார், ஏனெனில் தம் மூத்த மகன் வழக்கறிஞராக வேண்டும் என்பது அவரது தந்தையின் ஆவலாக இருந்தது. மார்ட்டினுக்கு சட்டத்தில் எந்த விருப்பமும் இல்லை, விரைவில் அவர் இறையியல் மற்றும் மெய்யியலுக்கு மாறினார். 1505ல் அவர் முதுகலை பட்டம் பெற்றார்.

4. 1505 ஜூலை 2ல், 21வது வயதில், அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து குதிரை மீது அமர்ந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அவரது அருகில் ஓர் இடி விழுந்தது. “உதவி செய்யும், புனித அன்னா! நான் ஒரு துறவியாவேன்!” என்று அவர் கத்தினார், மேலும் இதை ஒரு “தன்னார்வமற்ற மற்றும் கட்டாய” வாக்குறுதியாக அவர் எடுத்துக்கொண்டார் (ஆயினும் அவர் துறவுமடத்தில் நுழைந்ததன் மெய்யான காரணம் சர்ச்சைக்குரியதாகவே தொடர்கிறது). பலரும் வியப்படைய, அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய 15

நாட்களுக்குப் பிறகு எர்புர்ட்டில் உள்ள புனித அகுஸ்தீன் துறவுமடத்தில் நுழைந்தார். அவரது தந்தை இந்த திடீர் முடிவால் ஆத்திரமுற்றார்.

5. ஓர் அகுஸ்தீனியத் துறவியாக, லுத்தர் தம்மை நோன்பு, நீண்ட செபம், திருப்பயணம், மற்றும் அடிக்கடி பாவஅறிக்கை ஆகியவற்றில் அர்ப்பணித்தார். ஆழ்ந்த ஆன்மிகத் தளர்வை தொடர்ந்து அனுபவித்ததாக அவர் தம்மைப் பற்றி விவரிக்கிறார். அவரது மேலவரான ஜோகன் வோன் ஸ்தாவ்பிட்ஸ், லுத்தரின் மனம் தமது பாவங்கள் குறித்த சிந்தனையில் இருந்து விலகி கிறிஸ்துவின் பேறுபலன்களை நோக்கிச் சென்றதாக குறிப்பிடுகிறார். உண்மை மனந்திருந்தல் என்பது தன்னேற்பாடான கழுவாய்கள் மற்றும் தண்டனைகளை உள்ளடக்கியது இல்லை, மாறாக இதயத்தின் மாற்றமே என்று அவர் கற்பித்தார்.

6. 1507ல், லுத்தர் எர்புர்ட் கதீட்ரலில் திருநிலைப்பாடு பெற்றார். 1510ல், தமது அகுஸ்தீனிய சபையில் இருந்து ஒரு கூட்டத்துக்காக ரோமைக்கு அனுப்பப்பட்டார். அவர் ரோமையில் இருந்தபோது, அங்கு அவர் பார்த்ததாகக் கூறும் முறைகேடு மற்றும் ஆன்மிகக் குறைபாட்டால் (எ.கா. சமயச் சடங்குகளில் குருக்களின் ஏளன நடத்தை, பக்தியுள்ள துறவிகள் மக்களின் கேலிக்குள்ளானது போன்றவை) இடறலுக்கு ஆளானார். அவர் பார்த்த ஆன்மிக வெறுமை அவரை திருச்சபையில் இருந்து வெளியேறச் செய்யவில்லை என்றாலும், இந்த அனுபவம் அவர் அமைதியைக் குலைத்து, அவரது பிணியுற்ற விழிப்புநிலையைத் தூண்டியது.

7. 1512 அக்டோபரில், விட்டன்பர்க் பல்கலைக்கழகத் துறையில் ஏற்கப்படுவதற்குச் சற்று முன்பு, அவர் உரிமநிலை பட்டமும், இறையியல் முனைவர் பட்டமும் (எல்லாம் ஒரே மாதத்திற்குள்) பெற்றார். 1513ல் அவர் மறைநூல் விரிவுரையாளராக நியமனம் பெற்றார், தமது பணியின் எஞ்சிய காலத்தை இந்த நிலையிலேயே கழித்தார்.

8. கூடுதலான புதிய பொறுப்புகளால் அவரது பணிச்சுமை அதிகரிக்கவே, அவர் குழந்தைப் பருவ உணர்ச்சி சார்ந்த பாதிப்புகளைச் சந்தித்து, அது வாழ்நாளின் இறுதிவரை நீடித்தது. தெளிவற்ற மனச்சான்றால் எழுந்த உள்ளார்ந்த குழப்பத்தால் பிணியுற்று லுத்தர் போராடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த பிணியுற்ற நிலை இறுதியாக முறையான விழிப்பு நிலையாக வளர்ச்சி அடைந்தது. அவர் கடமையான ஆன்மிகப் பயிற்சிகளைப் புறக்கணித்து, குலைவுற்ற துறவறப் பயிற்சிகளில் ஈடுபட்டார். எடுத்துக்காட்டாக, திருப்புகழ்மாலை செபத்தை பல வாரங்கள் புறக்கணித்து, உணவையும் பானத்தையும் தவிர்த்து தம்மையே வருத்திக் கொண்டார். இது அவரை ஐந்து வாரங்கள் தூக்கமின்மைக்கும் ஒருமுறை பித்துநிலையின் ஆபத்திற்கும் தள்ளியது.

9. அவர் தமது துறவுமடத்து ஒழுங்குகள் மற்றும் தமது அறிவுரையாளரின் ஆலோசனைகளை பொருட்படுத்தவில்லை. இறுதியாக, அவரது பிணியுற்ற விழிப்புநிலை காரணமாக, கடவுளை வெஞ்சினம் கொண்டவராகவும், பழிவாங்குகிறவராகவும் பார்க்கத் தொடங்கினார். பாவத்திற்காக அவர் துயருற்றார், ஆனால் கடவுளின் மன்னிக்கும் இரக்கத்தில் உறுதிகொண்டு குழந்தை

போன்று அவரை அணுக இயலவில்லை. இதன் விளைவாக நம்பிக்கையற்றுச் சோர்ந்தார், தொடர்ச்சியாக கடவுள் மீது வெறுப்பும் சினமும் கொண்டார்.

இந்த அசாதாரண நிலை, லுத்தரை நீடித்த ஆன்மிக மனச்சோர்வைக் கொணர்ந்தது, இதனால் வினோத காரணமறியும் செயல்மை நற்செயல்கள் தொடர்பான திருச்சபையின் படிப்பினைகளை அவர் குறைகூறக் காரணமானது. இது ஒரு நகைமுரண், ஏனெனில் திருச்சபையின் படிப்பினை மற்றும் ஒழுக்க விதிக்கு எதிராக அவர் நெடுங்காலம் வாழ்ந்துள்ளார்.

10. ரோமைக்கு எதிராக லுத்தரைத் தூண்டியப் பொறியாக பேறுபலன்களின் நடைமுறை இருந்தது. பேறுபலன்கள் என்பவை ஏற்கெனவே மன்னிக்கப்பட்டப் பாவங்களுக்கான உலகுசார் தண்டனையை முழுமையாக அல்லது பகுதியாக நீக்குவதாகும், இந்த செயலில் ஈடுபடும் நபருக்கு அல்லது உத்தரிக்கும் நிலையிலுள்ள ஓர் ஆன்மாவுக்கு இதைப் பயன்படுத்தலாம். ஒரு பேறுபலனைப் பெறுவதற்கு முன்பாக, திருப்பயணம் அல்லது இரக்கச் செயல் செய்வது போன்ற வேறொரு நற்செயலோடு, ஒருவர் ஒப்புரவு மற்றும் நற்கருணை அருளடையாளங்கள் பெற்றிருக்க வேண்டும்.

11. லுத்தரின் காலத்தில், புனித பேதுரு பசிலிக்கா கட்டுமான நிதிக்காக திருத்தந்தை 10ம் லியோ நன்கொடைகள் தர அழைப்பு விடுத்தார். அதே நேரத்தில், பிராண்டன்பர்க் கர்தினால் ஆல்பர்ட்டுக்கும் திருச்சபையின் பல பதவிகளைத் தக்கவைக்க எதிராளிக்கு செலுத்தியப் பணத்தால் ஏற்பட்டக் கடன்களை அடைக்க நிதியுதவி தேவைப்பட்டது.

12. ஜோகன் டெட்சல் என்ற ஒரு தோமினிக்கத் துறவிக்கு, கத்தோலிக்கப் பேறுபலன்கள் குறித்து போதித்து, பேறுபலன்களைப் பெறுவதற்குப் பரிந்துரைக்கப்படும் இரக்கச் செயலாக நன்கொடைகள் வழங்க ஊக்குவிக்கும் அலுவல் தரப்பட்டிருந்தது. இந்த நன்கொடைகளால் கிடைக்கும் வருவாய் இரண்டு சரிபாதியாகப் பிரிக்கப்பட்டு, ஒருபாதி புனித பேதுரு பசிலிக்கா கட்டவும், மறுபாதி கர்தினால் ஆல்பர்ட்டுக்கும் அளிக்கப்பட இருந்தது. வரலாற்றாளர்கள் கருத்துப்படி, டெட்சலின் போதனையே லுத்தரின் போராட்டத்தைத் தூண்டியது. இன்னும் செய்யப்படாதப் பாவங்களுக்கு முழு பாவமன்னிப்பை விற்று முறைகேடு செய்ததாக, அவர்மீது குற்றம் சாட்டப்படுகிறது. பேறுபலன்கள் குறித்த அவரது போதனையால் திரட்டப்பட்ட பணம் முழுவதும் மேற்கண்ட இரண்டு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது.

13. உண்மையில், மார்ட்டின் லுத்தருக்கு சில ஆண்டுகள் முன்னதாகவே, (பேறுபலன்கள் தொடர்பானவை உள்பட) திருச்சபையில் பலவித முறைகேடுகள் ஏற்கெனவே பரவியிருந்தது. சில திருநிலையினர் தங்கள் வரம்புமீறிய செலவுகளுக்குத் திருச்சபையின் “நன்கொடைகளை” பயன்படுத்தி வந்தனர். முறைகேடுகள் எப்பொழுதும் திருச்சபையில் இருந்திருக்கின்றன, அவை தற்போது இல்லை என்று கூறுவது தன்னேய்ப்பாக இருக்கும்.

14. கத்தோலிக்க திருச்சபையுடனான தமது மோதலில் லூத்தர் தவறாகச் சென்றார், குளிக்கும் நீரில் குழந்தையை எறிவது போன்று, திருச்சபையின் அதிகாரத்தை மறுக்க திருச்சபையில் மனிதர்கள் செய்த ஊழலைப் பயன்படுத்தினார். இந்த செயல்மையில், கத்தோலிக்க திருச்சபை ஒருபோதும் போதிக்காத சில கோட்பாடுகளை, அதற்கு உரியதாகக் கூறி சிலர் அதைக் கண்டிக்க முற்படுகின்றனர். கத்தோலிக்க திருச்சபை கற்பிக்காதவற்றை லூத்தர் எதிர்த்து நின்றார். தமது பிணியுற்ற விழிப்புநிலையுடனான போராட்டத்தால் கறைபடிந்த சீர்திருத்தத்திற்கான அவரது போராட்டம், திருச்சபையின் அதிகாரத்தின் இடத்தில் தனிப்பட்டத் தீர்ப்பிடலுக்கான உரிமையை வலியுறுத்துவதற்கு இட்டுச் சென்றது.

15. 1517 அக்டோபர் 31ல், அனைத்து புனிதர்களின் திருவிழிப்பு வேளையில், லூத்தர் தமது (95 ஆய்வுரைகள் என பொதுவாக அறியப்படும்) *பேறுபலன்களின் ஆற்றல் மீதான சர்ச்சையை* கோட்டைக் கதவில் தொங்கவிட்டார், அக்கதவு பல்கலைக்கழகத்தின் கல்வி செயல்பாடுகள் மற்றும் வாதிடல்கள் குறித்த எல்லா கவனிகைகளின் விளம்பரப்பலகையாக இருந்தது. இது ஒரு போர் அறிவிப்பன்று, ஆனால் கல்வி சார்ந்த ஒரு வாதிடலே. அவர் பேறுபலன்களைச் சார்ந்திருக்கும் நடைமுறை நம்பிக்கையாளர்களை மீட்பின் ஒரே உண்மை ஆதாரமான கிறிஸ்துவில் விசுவாசம் என்பதில் இருந்து விலக்குவதாக வாதிட்டார். கடவுள் மட்டுமே மன் வருந்தும் விசுவாசிகளை மன்னிக்கும் ஆற்றல் கொண்டுள்ளார். லூத்தரின் கூற்றுகளை உடனே திரும்பப்பெற பாப்பிறை மன்றம் கட்டளையிட்டது, ஆனால் அவர் மறுத்துவிட்டார்.

16. லூத்தர் சமயச் சீர்திருத்தம் குறித்த பொது விவாதத்தில் சீராக ஈடுபடத் தொடங்கினார். அச்சகத்தின் உதவியோடும், அவர் பின்வரும் வாதங்களை முன்னெடுத்துச் சென்றார்:

அ) திருச்சபை அன்று, விவிலியம் மட்டுமே கிறிஸ்தவ வாழ்வின் ஒரே அதிகாரத்திற்கு உரியதாகக் கருதப்பட வேண்டுமென்று அவர் வாதிட்டார்.
ஆ) கிறிஸ்துவில் மட்டும் கொண்ட விசுவாசத்தின் வழியாக மட்டுமே பெற்ற அருளால் மட்டுமே ஏற்புடையவராதல் என்ற புதிய கோட்பாட்டை அவர் பரப்பினார்.
இ) திருத்தந்தையின் அதிகாரத்தை அவர் மறுத்தார், விவிலியத்தின் அடிப்படையில் வாதிடும் வரை எந்த திருச்சபை மன்றமும் அல்லது ஒரு தனி நம்பிக்கையாளரும் திருத்தந்தைக்கு சவால் விடுக்கும் உரிமை கொண்டுள்ளார் என்று அறிவித்தார். திருத்தந்தையின் அடித்தளம் மீது திருச்சபை இருக்கவில்லை, மாறாக கிறிஸ்துவின் மீதான விசுவாசத்தின் மீது இருக்கிறது என்று அவர் வாதிட்டார்.
ஈ) அவர் அருள்பணி குருத்துவத்தின் நடைமுறையை, அதாவது மக்கள் சார்பாக கடவுளை குருக்கள் அணுகுவதை மறுத்தார். மாறாக, மக்களே நேரடியாக கடவுளைத் தொடர்பு கொள்ளலாம் என்று கூறி எல்லா நம்பிக்கையாளர்களின் குருத்துவத்தை அவர் பரப்பினார்.
உ) ரோமை கத்தோலிக்க மரபில் நடைமுறையில் இருந்த லத்தீனை அன்றி, திருச்சபை மக்களின் பொது மொழியைப் பயன்படுத்த அவர் வலியுறுத்தினார். அதன் விளைவாக, அவர் ஜெர்மானிய மொழியில் திருப்பலி நிகழ்த்தினார், மேலும் முழு விவிலியத்தையும் ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார். அந்த செயல்மையில், பழைய ஏற்பாட்டில் இருந்து இணைத்

திருமுறை நூல்களையும், புதிய ஏற்பாட்டில் இருந்து நான்கு (எபிரேயர், யாக்கோபு, யூதா, மற்றும் திருவெளிப்பாடு) நூல்களையும் நீக்கினார்.

1521ல், லுத்தர் திரிபுரையாளர் என்று அறிவிக்கப்பட்டு, திருச்சபையில் இருந்து புறம்பாக்கப் பட்டார். அவர் தமது குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெற வற்புறுத்தப்பட்டார், ஆனால் அவர் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டார். இந்த மறுப்பு கத்தோலிக்க திருச்சபையில் இருந்து அவர் வெளியேற முடிவெடுத்ததை உறுதி செய்தது.

17. இந்த புரட்டஸ்டான்ட் சீர்திருத்தம் ஐரோப்பா முழுவதும் பரவியது, (மார்ட்டின் லுத்தர் இருந்த) ஜெர்மனி, (ஜான் கால்வினின்) ஜெனேவா, (ஹுல்ட்ரிச் சுவிங்லியின்) சுரிச் ஆகியவை சீர்திருத்தத்தின் மூன்று மையங்களாக இருந்தன. தொடர்ச்சியாக, மன்னர் 8ம் ஹென்றியின் கீழ் ஆங்கிலிக்கச் சீர்திருத்தமும் நடைபெற்றது.

18. இந்த புரட்டஸ்டான்ட் சீர்திருத்தம் இன்றும் தொடர்கிறது, உலகெங்கும் ஒருங்கமைந்த 40,000 பகுப்புகளில் மொத்தம் 800 மில்லியன் பேர் இருக்கின்றனர். பொதுவாக, நிறுவப்பட்ட காலத்தைச் சார்ந்து அவற்றை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம்:

அ) *சீர்திருத்தக் குழுமங்கள்,* 16ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டவை. சில எடுத்துக்காட்டுகள்: லுத்தரன், பிரஸ்பிதேரியன், ஆங்கிலிக்கன்.
ஆ) *சுதந்திரக் குழுமங்கள்,* ஆங்கிலிக்க மற்றும் சீர்திருத்த திருச்சபைகளில் இருந்து 17 முதல் 21ஆம் நூற்றாண்டில் பிரிந்து தோன்றியவை. சில எடுத்துக்காட்டுகள்: குவாக்கர்கள், பாப்திஸ்துகள், மெத்தோடிஸ்ட்கள், எவாஞ்சலிக்கல்கள்.
இ) *புதுநிலை பிரிவுகள்,* 19ஆம் நூற்றாண்டில் இருந்து எழுந்தவை. சில எடுத்துக்காட்டுகள்: பிரதர்ன், இரட்சணிய சேனை, பெந்தக்கோஸ்து இயக்கம், ஏழாம் நாள் வருகையினர், மொர்மோன்கள், யகோவா சாட்சிகள், கிறிஸ்டியன் சயின்டிஸ்ட்கள், யுனிட்டேரியன்கள்.

(ஆசிய ஆயர்கள் பேரவையின் கூட்டமைப்பில் இருந்து எடுக்கப்பட்டது, *உரையாடல்: ஆசியக் கத்தோலிக்கர்களுக்கான ஆதாரக் கையேடு,* 2001)

19. லுத்தர் கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வெளியேறும் நோக்குடன் சீர்திருத்தத்தைத் தொடங்கவில்லை, திருச்சபைக்குள் இருந்து சீர்திருத்தம் செய்வதே அவரது நோக்கமாக இருந்தது என்று பல புரட்டஸ்டான்ட் வரலாற்றாளர்கள் கூறுகின்றனர். அவ்வாறெனில் அவர் புரட்டஸ்டான்ட் சீர்திருத்தத்தைத் தொடங்கினார் என்று கூறுவது மிகையானதும் வீணானதும் ஆகும், அவர் விரும்பியது எல்லாம் திருச்சபையில் இருந்த முறைகேடுகளைச் சரிசெய்யவே என்பது மிகச் சிறியதாகிறது. திருச்சபையில் இருந்த முறைகேடுகளை திருச்சபையில் இருந்து வெளியேறாமல் வெளிப்படையாக எதிர்த்த லுத்தரின் சமகாலத்தவர்களும் (எ.கா. புனித தாமஸ் மூர்) இருந்துள்ளனர்.

20. புரட்டஸ்டான்ட் சீர்திருத்தத்திற்காக லுத்தர் வருத்தமுற்றாரா? புரட்டஸ்டான்ட் சீர்திருத்தம் முற்றிலும் தோல்வியுற்றது அல்லது அது நிகழ்ந்திருக்கக்கூடாது என்று அவர் ஒருபோதும் கூறியதில்லை, ஆனால் புதிய புரட்டஸ்டான்ட்கள் தங்கள் முறைமையை கத்தோலிக்க முறைமைக்கு மேலானதாக வெளிப்படுத்த தவறியதற்காக அவர் புலம்பினார்.

21. புரட்டஸ்டான்ட் சீர்திருத்தம் தொடங்கி தற்போது 500 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. கிறிஸ்தவர்கள் நடுவிலான ஒற்றுமையின்மை தொடர்ந்து ஒரு முறைகேடாகவும், கடவுளின் மக்கள் "ஒன்றாய் இருப்பார்களாக" (ஒப். யோவா 17:11-26) என்ற இயேசுவின் செபத்துக்கு எதிரானதாகவும் இருக்கிறது. இதன் காரணமாக, கத்தோலிக்க திருச்சபை தனக்கு வெளியிலுள்ள எல்லா கிறிஸ்தவர்களிடமும் தொடர்ந்து உரையாடுகிறது, இது புரட்டஸ்டான்ட் குழுமங்களையும் உள்ளடக்கியுள்ளது. எனினும், நமது உரையாடலிலும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் முயற்சிகளிலும் நமது தற்போதைய உறவுநிலையின் உண்மை தன்மையைப் பிரதிபலிக்க நாம் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

12. *தோமினுஸ் யேசுஸ்,* 17: "...செல்லத்தக்க ஆயர்நிலை மற்றும் ஒருங்கிணைந்த நற்கருணை மறைபொருள் பாதுகாக்கப்படாத **திருச்சபை குழுமங்கள்**, தகுந்த விதத்தில் **திருச்சபைகளாக இல்லை**; எனினும், இந்த குழுமங்களில் திருமுழுக்கு பெற்றோர், திருமுழுக்கினால் **கிறிஸ்துவில் இணைந்துள்ளனர்**, இவ்வாறு நிறைவற்று இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட விதத்தில் திருச்சபையோடு ஒன்றித்துள்ளனர்."

13. புரட்டஸ்டான்ட் கிறிஸ்தவர்களுடான நமது உறவுநிலை தொடர்பான *ஒன்றிப்புக்கான கொள்கைகள் மற்றும் விதிகளைச் செயல்படுத்துவதற்கான நடத்தேட்டில்* (கிறிஸ்தவ ஒன்றிப்பை ஊக்குவிப்பதற்கான பாப்பிறை மன்றம், 1993) சில முக்கிய அம்சங்கள்:

*புள்ளி 104இ (வளங்களைப் பகிர்தல் பற்றி)*: ஆன்மிகச் செயல்பாடுகள் மற்றும் வளங்களைப் பகிர்தல், இந்த இரட்டை உண்மையைப் பிரதிபலிக்க வேண்டும்:
1) ஆவிக்குரிய வாழ்வில் மெய்யான ஒன்றிப்பு ஏற்கெனவே கிறிஸ்தவர்கள் நடுவே இருக்கிறது, மேலும் அது அவர்களின் செபத்திலும் திருவழிபாட்டிலும் வெளிப்படுகிறது;
2) விசுவாசம் மற்றும் புரிதலின் வேறுபாடுகளால் முழுமையுறாத இந்த ஒன்றிப்பின் பண்பு தடுக்கப்படா ஆன்மிக வழங்கல்களின் ஊடிடைப் பகிர்தலுக்கு இணக்கமற்றதாக இருக்கிறது.

*புள்ளி 107 (ஊடிடை மரியாதை பற்றி)*: மற்றத் திருச்சபைகள் மற்றும் திருச்சபை குழுமங்களின் திருவழிபாட்டு மற்றும் அருளடையாள ஒழுங்கிற்கு கத்தோலிக்கர்கள் உண்மை மரியாதை காட்ட வேண்டும், அதற்கு பதிலாக அவர்களும் கத்தோலிக்க ஒழுங்கிற்கு அதே மரியாதை காட்ட கேட்கப்படுகின்றனர்.

*புள்ளி 104உ (நற்கருணை கொண்டாட்டம் பற்றி)*: நற்கருணை கொண்டாட்டம் கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசம், வழிபாடு மற்றும் குழும வாழ்வில் முழு ஒன்றிப்பின் காணக்கூடிய

வெளிப்பாடாக இருக்கிறதால், இது அந்த திருச்சபையின் திருப்பணியாளர்களால் நிறைவேற்றப் படுகிறது, மற்றத் திருச்சபைகள் அல்லது திருச்சபை குழுமங்களின் திருப்பணியாளர்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்ற அனுமதியில்லை.

*புள்ளி 108 (இணைந்து செபித்தல் பற்றி)*: பொருத்தமான இடத்தில், கத்தோலிக்கர்கள் திருச்சபையின் விதிகளுக்கு ஏற்ப, மற்றத் திருச்சபைகள் மற்றும் திருச்சபை குழுமங்களின் கிறிஸ்தவர்களுடன் செபத்தில் இணைய ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய பொதுவான செபங்கள் ஒற்றுமையின் அருளுக்காக விண்ணப்பிக்க மிகவும் பயனுள்ளவை, மேலும் அவை கத்தோலிக்கர்களை மற்றக் கிறிஸ்தவர்களோடு பிணைக்கும் நேர்மையான வெளிப்பாடுகளாக இருக்கின்றன. செப பகிர்வு தன்னிலேயே ஆன்மிக ஒப்புரவின் ஒரு வழியாக இருக்கிறது.

*புள்ளி 109*: கத்தோலிக்கர்கள் மற்றும் மற்றக் கிறிஸ்தவர்களுக்கான பொது செபம் பரிந்துரைக்கப்படுகிறது, அதனால் அவர்கள் தங்கள் தேவைகள் மற்றும் தாங்கள் பகிர்கின்ற பிரச்சனைகளை கடவுளுக்கு முன்பாக ஒருசேர வைக்கலாம் -- எ.கா. அமைதி, சமூக பிரச்சனைகள், மக்கள் நடுவிலான ஊடிடை பிறரன்பு, குடும்ப மாண்பு, வறுமை, பசி, மற்றும் வன்முறை பாதிப்புகள் போன்றவை. இவை சூழல்களுக்கு ஏற்ப, ஒரு நாட்டில், பகுதியில் அல்லது குழுமத்தில் கடவுளுக்கு நன்றியறிதல் அல்லது விண்ணப்பித்தலின் பொதுவானச் செயல்பாடாக, ஒரு தேசிய விடுமுறை நாளில், பொது பேரழிவு அல்லது துயரான நேரத்தில், தங்கள் நாட்டுக்காக உயிரிழந்தோரை நினைவுகூரும் நாளில் அமையலாம். படிப்பு அல்லது பொது செயல்பாட்டுக்காக கிறிஸ்தவர்கள் நடத்துகின்றக் கூட்டத்திலும் இந்த வகை செபம் பரிந்துரைக்கப்படுகிறது.

*புள்ளி 110*: எனினும், செபப் பகிர்வானது குறிப்பாக கிறிஸ்தவ ஒற்றுமையை மீட்டமைப்பதோடு தொடர்புள்ளதாக இருக்கிறது... இந்த வகை செபம், குறிப்பாக கிறிஸ்தவ ஒற்றுமைக்கான செப வாரம் அல்லது விண்ணேற்றம் மற்றும் பெந்தக்கோஸ்தே விழாக்களுக்கு இடையிலான காலத்தில் பரிந்துரைக்கப்படுகிறது.

*புள்ளி 115 (ஞாயிறு கடமைகள் பற்றி)*: ஆண்டவரின் நாளில் நற்கருணை கொண்டாட்டம் திருவழிபாட்டு ஆண்டு முழுவதற்கும் அடித்தளமும் மையமுமாக இருக்கிறதால், கத்தோலிக்கர் – கிழக்கத்திய திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் சட்டத்திற்கு ஏற்ப – அந்த நாளிலும் நியமமான நாட்களிலும் திருப்பலியில் பங்கேற்பது கடமையாக இருக்கிறது. ஆகவே ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்றிப்பு வழிபாடுகளை நடத்துவது பரிந்துரைக்கத் தக்கதன்று, கத்தோலிக்கர்கள் ஒன்றிப்பு வழிபாடுகளில் அல்லது மற்றத் திருச்சபைகள் மற்றும் திருச்சபை குழுமங்களின் வழிபாட்டில் பங்கேற்றாலும், இத்தகைய நாள்களில் திருப்பலியில் பற்கேற்பது கடமை என்பதை நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

*புள்ளி 118 (திருவழிபாட்டு பங்கேற்பு பற்றி)*: மற்றத் திருச்சபைகள் மற்றும் திருச்சபை குழுமங்களில் நடைபெறும் திருவழிபாட்டு கொண்டாட்டங்களில், அவர்கள் விருந்தினராக

இருக்கின்றத் திருச்சபையின் திருப்பாடல்கள், பதிலுரைகள், புகழ்ப்பாக்கள் மற்றும் பொது செயல்பாடுகளில் பங்கேற்கலாம். அதை நடத்துவோரால் அழைக்கப்பட்டால், அவர்கள் ஒரு பாடத்தை வாசிக்கலாம் அல்லது போதிக்கலாம்.